# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

## அஹமதி தமிழ் திருச்சபை

# "ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் ..."

வெளி- 2:7

செய்தி மலர்
2023
ஜூலை

இதழ் : 03
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# "ஆவியானவர் பேசுகிறார்"

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும் இயேசுவின் நாமத்தில் ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

கடந்த ஜூன் மாதம் முழுவதும் நம்மை கரம்பிடித்து நடத்தின கர்த்தர் வரும் ஜூலை மாதத்திலும் அதிசயமாய் வழி நடத்துவாராக.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் எபேசு, சிமிர்னா, பெர்கமு, சியத்தீரா, சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கியா ஆகிய ஏழு ஆதி திருச்சபைகளுக்கு ஆவியானவர் தரிசனத்தில் பேசி அந்த சபைகளுடைய நிறைவு குறைவுகளை சுட்டி காண்பித்ததோடு எந்தெந்த காரியங்களையெல்லாம் செய்தால் சபைக்கு ஆசீர்வாதங்களை கொண்டு வரும் என்பதை தெளிவாக சுட்டிக் காண்பித்ததை வாசிக்கிறோம்.

ஆம், இன்றைக்கும் ஆவியானவர் சபைகளோடு பேசுகிறார். தேவ சித்தம் என்னவென்பதை தெளிவாக சுட்டிக்காண்பிக்கிறார். நம் தேவன் பேசுகிற தெய்வம். மனிதர்களாகிய நம்மோடு அவர் பேசுகிறார். எந்தெந்த வகைகளில் நம்மோடு பேசுகிறார் என்பதைக் குறித்து கீழ் வரும் பகுதிகளில் பார்க்கலாம்.

**"ஆவியானவர் சபைகளுக்கு சொல்கிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் . . ."**
**—(வெளி—2:7)**

## 1.பெரிய சத்தம்......

மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டேன். அது இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாய் இருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களின் கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்.

இனி மரணமும் இல்லை, துக்கமும் இல்லை, அலறுதலும் இல்லை, வருத்தமும் இல்லை முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர் இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும் அவர் இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையானவைகள். இவைகளை எழுது என்றார். (வெளி-21:3-5)

ஆம் பிரியமானவர்களே, நமக்காக ஸ்லத்தை ஆயத்தம் பண்ணின பின்பு அவரை நம்பியிருக்கின்ற அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு நிரந்தரமாக அவரோடு தங்கியிருக்கும் பாக்கியத்தை இந்த வசனம் தெளிவாக விளக்குகிறது. நம் கண்ணீர் துடைக்கப்படும். சகலமும் புதிதாகும். இதுவே ஆவியானவருடைய வாக்கு. கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின் மேல் தொனிக்கிறது. மகிமையுள்ள தேவன் முழங்குகிறார், கர்த்தர் திரளான தண்ணீர்களின் மேல் இருக்கிறார், கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது, கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது, கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது. கர்த்தர் லீபனோனின் கேதுரு மரங்களை முறிக்கிறார். கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜீவாலைகளைப் பிளக்கும். கர்த்தருடைய சத்தம் வனாந்திரத்தை அதிரப்பண்ணும், கர்த்தர் காதேஸ் வனாந்திரத்தை அதிரப்பண்ணுகிறார். கர்த்தருடைய சத்தம் பெண் மான்களை ஈனும்படி செய்து காடுகளை வெளியாக்கும். அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையை பிரஸ்தாபிக்கிறார்கள். (சங்கீ-29:3-9)

## 2.நன்மையானவைகளைப் பேசும் சத்தம்

நீங்களோ, சீயோன் மலையினிடத்திற்கும் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும் ஆயிரம் பதினாயிரமுமான தேவ தூதர்களிடத்திற்கும், பரலோகத்தில் போரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினடத்திற்கும், யாவருக்கும் நியாதிபதியாகிய தேவனிடத்திற்கும் பூரணராக்கப்பட்ட நீதி மான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்
புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கலும் நன்மையானவைகளை பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.

பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோம் என்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் பூமியிலே பேசினவருக்கு செவி கொடுக்கமாட்டோம் என்று விலகினவர்கள் தப்பிப் போகாமலிருக்க பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் நாம் எப்படி தப்பிப் போவோம்? அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசைப் பண்ணிற்று. இன்னும் ஒரு தரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப் பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத் தத்தம் செய்திருக்கிறார். நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையை பற்றிக்கொள்ளக்கடவோம். (எபி-12:22-29)

ஆம் பிரியமானவர்களே, நன்மை மாத்திரமே செய்து துரோகிகளால் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இன்றைக்கும் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறது. அந்த சத்தம் நம்முடைய செவிகளில் எப்போதும் விழட்டும். அந்த சத்தத்திற்கு கீழ்படிந்து கிருபையை பற்றிக்கொள்ளக் கடவோம். அந்த அன்பு ஆண்டவரின் சத்தம் இன்றைக்கும் நம் எல்லோரையும் அவரண்டை வரும்படி அழைக்கிறது. அந்த அன்பு சத்தத்திற்கு கீழ்ப்படிவோமாக.

## 3.வேத வசனங்கள் மூலம் நம்மோடு பேசும் சத்தம்

19-ஆம் சங்கீதம் முழுவதும் வாசிக்கும்பொழுது எப்படி கர்த்தருடைய சத்தம் சிருஷ்டிகள் வழியாய் மற்றும் வேத வசனங்கள் வழியாய் வெளிப்படுகிறது என்பதை தெளிவாகக் காணலாம். "பகலுக்க பகல் வார்த்தைகளை பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவை தெரிவிக்கிறது. அவைகளுக்கு பேச்சுமுமில்லை, வார்த்தையுமில்லை. அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக்கு கடைசி வரைக்கும் செல்லுகிறது.

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும், விரும்படத்தக்கதும், தேளிலும் தேள் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது. அன்றியும் அவைகளால் அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளை கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலனுண்டு.

ஆம் பிரியமானவர்களே, சூரியனும், சந்திரனும், வானங்களும். ஆகாய விரிவும், பகலும் இரவும் கர்த்தரின் சத்தத்திற்கு கீழ்படிந்து தம் கடமைகளை நேர்த்தியாய் செய்து கொண்டிருக்கிறது. அதேப் போல வேதத்தின் மூலம்,

வேத வசனங்கள் மூலம் ஆண்டவரின் சத்தம் நம் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. ஆகவே அனுதினமும் வேதத்தை வாசித்து அதின் வழியாய் பேசுகிற ஆண்டவரின் சத்தத்தை கவனித்துக் கேட்டு அவர் வழிகளில் நடக்கும்போது அளவில்லாத ஆசீர்வாதங்களை நம் ஆவி ஆத்துமா சரீரத்திலே பெற்று அனுபவிப்போம் என்பதிலே எந்தவொரு சந்தேகமுமில்லை.

நீங்கள் வலது புறமாய் சாயும்போதும், இடது புறமாய் சாயும்போதும் வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசா–30:21)

இளைப்படைந்தவனுக்கு சயமத்துக்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு கல்வி மானின் நாவைத் தந்தருளினார். காலைதோறும் என்னை எழுப்புகிறார். கற்றுக்கொள்ளுகிறவர்களைப் போல நான் கேட்கும்படி என் செவியை கவனிக்க செய்கிறார். (ஏசா–50:4,5)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே , மகா பெரிய தேவன் நம்மோடே பேச விரும்புகிறார். அநேக விதங்களிலே நம்மோடு பேசுகிறார். அவர் அன்பின் வார்த்தைகளை கவனித்துக் கேட்டு அவர் சொல்லுகிறபடி நம் வாழ்க்கையை நாம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் வரும் ஜுலை மாதம் முழுவதும் கரம் பிடித்து நடத்தி ஆசீர்வதிப்பாராக.

சபை தலைவர்,
உங்கள் அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

## தேவ செய்தி

" உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது". சங்கீதம் 119:105

பாவ இருள் நிறைந்த இந்த உலகத்திலே, பரிசுத்தமாய், சாட்சியாய், மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்வது என்பது மிகப்பெரிய ஒரு சவாலாய் காணப்படுகிறது. சுய பெலத்தாலோ, சுய ஞானத்தாலோ, நம்முடைய திறமைகளை வைத்தோ இதை சாதிக்க

முடியாது. பரிசுத்த வேதாகமத்தின் உதவியினால் மாத்திரமே நாம் பரிசுத்தமாய் வாழ முடியும்.

யோசேப்பைப் பாருங்கள்! அவன் கையில், பரிசுத்த வேதாகமம் இல்லை. ஆனால், தேவனைக்குறித்த அறிவு இருந்தது. அவர் எப்படிப்பட்டவர், அவருக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்று அறிந்திருந்தான். அன்று வேதாகமம் அவன் கையில் இல்லை; யோசேப்பின் இருதயத்தில் இருந்தது. தண்ணீர் இல்லாத வெறுங்குழியில் போட்டார்கள்; ஜீவத்தண்ணீராய் வேத வசனம், தேவனைப்பற்றிய அறிவு அவன் இருதயத்தில் நிறைந்து இருந்தது. பாலைவனச் சோலையாய் யோசேப்பு திகழ்ந்தான். காரணம் அவன் இருதயம் தேவ அறிவினால் நிறைந்து இருந்தது. இதை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே, உன் இருதயம் எதினால் நிறைந்து இருக்கிறது? சிந்தித்துப்பார்! உலக இச்சைகளா, பண ஆசையா, சுயபெருமையா? இன்றே வேத வசனங்களால் உன் இருதயத்தை நிரப்பி ஒப்புக்கொடு. நீ ஒரு பாலைவனச் சோலையாய் மாறுவாய். அந்தகார இருள் உன்னைச் சேதப்படுத்தாது.

வேதத்திலே, வேதத்திலே, விலைமதியா முத்துக்கள் உண்டு
தினம்தோறும் நீ அம்முத்துக்களைப்பார்

உண்மையாக நீயும் ஒரு முத்தாய் மாறுவாய்!
உண்மையாக நீயும் ஒரு முத்தாய் மாறுவாய்!

யோசேப்பு தன் அழகையோ, பெலத்தையோ, ஞானத்தையோ நம்பி வாழவில்லை; தேவனை அறியும் அறிவை நம்பி வாழ்ந்தான். தேவ அறிவு அவனுடைய நடைகளைக் காத்துக்கொள்ள உதவியது. தவறான பாதையில் சென்றுவிடாமல், சரியான பாதையில் நடக்க உதவியது.

பாவ இருள் போத்திபாரின் மனைவி மூலமாய் யோசோப்பை துரத்தினது. அவன் சம்மதிக்கவில்லை அவளுடைய கரங்களால் யோசேப்பின் வஸ்த்திரம் கறை படிந்தது. அந்தப் பாவக்கறை படிந்த வஸ்தரமும் தனக்கு வேண்டாம் என்று யோசேப்பு தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனான். பாவ வஸ்திரம் வேண்டாம்! தேவன் தரும் நீதியின் வஸ்திரம் போதும் என்று வெளியே ஓடினான். "நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு,

விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்று எபிரேயர் 12:1 வேதாகமத்தை யோசேப்பு அன்றே அறிந்திருந்தான் போலும்!

வேத வசனங்களை நம் வாழ்வில் சரியான பாதையை தேர்வுசெய்ய உதவுகிறது. கால்களுக்குத் தீபமாய் இருக்கிறது. கால்கள் நடப்பதற்கு மாத்திரமல்ல, ஓடுவதற்கும் உதவுகிறது. பாவ இருளிலிருந்து தப்பித்து ஓட, வேதவசனம் என்னும் தீபம் நமக்கு தேவைப்படுகிறது. நம்முடைய பாதைக்கும் வேதவசனங்கள் வெளிச்சமாய் இருக்கிறது. "நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும் போதும் வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்பும்" – ஏசாயா 30:21.
பாவத்தை விட்டு ஓடவேண்டும் என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறது. அதே சமயத்தில் நிதானமாய் நடக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. சுயபெருமை அல்ல; பொறுமையோடு தேவனின் பாதத்தில் காத்திருக்க வேண்டும். யோசேப்பு சிறையிலே, பொறுமையாய்க் காத்திருந்தான். தேவனுடைய நேரத்திற்க்காய் காத்திருந்தான். அவனுக்கு தெரியும் சரியான நேரத்தில் தேவன் என்னை உயர்த்துவார் என்று அறிந்திருந்தான். வெறும் தண்ணீராய் காணப்படும் என் வாழ்க்கை, தேவ சத்தம் வரும்போது, சுவையான திராட்சரசமாக மாறும் என்ற விசுவாசம் அவனுக்கு இருந்தது. நான் எகிப்தை மாத்திரமல்ல; அண்டை தேசத்தாரையும், தன் தகப்பன் வீட்டார் அனைவரையும் போஷிக்கும் காலம் வரப்போகிறது என்று பொறுமையோடே காத்திந்தான். அவனுடைய விசுவாச வாழக்கையை சிறைச்சாலையின் கம்பிகளால் முடக்கிப்போட முடியவில்லை.

காரணம் தேவனுடைய சத்தம் அவன் இருதயத்தில் ஓயாது தொனித்துக் கொண்டிருந்தது. சொப்பனங்களின் மூலமாக தேவன் அவனுக்கு உணர்த்திய காரியங்கள் நிறைவேறும் என்று காத்திருந்தான். பார்வோனுக்கு முன்பாக தன்னையல்ல, தேவனையே மகிமைப்படுத்தினான். "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார் என்றான்" ஆதி 41:16.தன்னைத் தாழ்த்தினான் ; தேவனை உயர்த்தினான். இமயம்போல் உயர்ந்திருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக நான் ஒரு தூசி என்ற அறிவு யோசேப்புக்கு இருந்தது.

நம் வாழ்க்கை பாதை சில வேளைகளில் பார்வோன் அரண்மனை போன்ற மண்மேடுகளாய் இருக்கலாம்; சில வேளைகளில் மரண இருளின் பள்ளத்தாக்காக இருக்கலாம். தேவனுடைய வசனம் நம் பாதைக்கு வெளிச்சமாய் இருக்கும் போது, நாம் நிலைதடுமாறாமல், நிதானமாய் நடக்க முடியும். கர்த்தர் தாமே அவருடைய வசனங்களைக் கொண்டு நம்மை நித்திய ஜீவனுக்கேதுவான பாதையில் நடத்துவாராக! ஆமென்!

கர்த்தரின் பணியில்,
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

## கன் மலையாகிய கிறிஸ்து

எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளுக்கு இச்செய்தி மலர் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

(2-சாமு-22:2) "கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையம், என் இரட்சகருமானவர்"

இயேசு கிறிஸ்து நம் கன்மலையாக, கோட்டையாக. இரட்சகருமாக இருக்கின்றவர். (மத்-7:24-27) " நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு இவைகளின் படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" என்றார். பெருமழை சொரிந்து, பெரு வெள்ளம் வந்து காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை, ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது" இந்த வசனங்களின் மூலமாக நமக்கு வெளிப்படும் சத்தியம் என்னவென்றால் நமக்குத் தேவன் கொடுத்துள்ள இந்த ஒரே ஒரு வாழ்க்கையையை அவருடைய சித்தத்திற்கு நாம் ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவின் மீது கட்டுவோம் என்றால் அவரே நமக்கு அஸ்திபாரம் போன்றவர். மாறாக, அவ்வாறு நாம் செய்யாமலிருந்தால் மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழையும், வெள்ளமும் வந்து காற்று அடித்து அவ்வீட்டின் மேல் (அவர்கள் வாழ்க்கையில்) மோதி விழுந்து, முழுவதும் அழிந்து போகும் என்றார்.

தேவனுடைய அபிஷேகம் இல்லாமல் ஊழியம் செய்பவர்களின் வாழ்க்கையும் அவ்வாறாகத் தான் இருக்கும். நாம் ஜாக்கிரதையாக இருக்கும்போது பிற்பாடு மகிமையுண்டாகும். "உங்களைத் தொடுகிறவன் அவனுடைய கண்மணியைத் தொடுகிறான்" (சகரியா-2:8)-ல் நாம் காண்கின்றோம்.

இயேசுவுக்காக உண்மையோடும், நீதிக்காக உத்தமத்தோடும் தன்னையே முழுவதுமாக அர்ப்பணித்து ஊழியம் செய்கின்ற தேவப்பிள்ளைகளை ஏளனமாக நினைப்பது, அவர்களை அவமானப்படுத்தும்படி நடக்கும் போது தேவனுடைய ராஜ்யம் நம்மிடத்திலிருந்து நீக்கப்பட்டுவிடும். (மத்-21:43-44), (லூக்-20:18) மேலும், எந்த ஒரு தேவப்பிள்ளைகள் அபிஷேகம் பெற்று, வரங்களைப் பெற்று ஊழியம் செய்யும் போது அவர்களை எதிர்த்துச் செயல்படுவது, கன்மலையாகிய கிறிஸ்து மீது எதிர்ப்பதற்குச் சமம். அவர் மீது (கன்மலையாகிய பாறை மீது) விழுந்து நாம் நொறுங்கிப் போய்விடும் நிலை நமக்கு ஏற்பட்டுவிடும். எனவே, நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது மிகமிக அவசியமானதாகும்.

(சங்கீ-121:1-5) நமக்கு ஒத்தாசை வரும் பர்வதமாகிய இயேசுகிறிஸ்துவை நாம் நோக்கிப் பார்த்து அவருடைய ஒத்தாசையைப் பெற நம்மை முழுவதுமாக அர்ப்பணிக்கும் போது, இஸ்ரவேலைக் காக்கின்ற நம் தேவன் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை. அவர் நம் வலது பக்கத்திலே நமக்கு நிழலைப் போலிருந்து காக்க வல்லவர். (சங்கீ-91:13-14) இந்த வசனங்களின்படி சாத்தானை நாம் ஜெயிக்க முடியும். அவர் மேல் நாம் வாஞ்சையாய் இருக்கிறபடியினாலும் அவர் நாமத்தை அறிந்திருக்கபடியினாலும் நம்மை அவர் உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பார் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. எனவே கன்மலையாகிய இயேசுகிறிஸ்துவோடு கூட நாமும் சேர்ந்து நம்மை நம் குடும்பத்தை ஊழியத்தை, சபையை ஒருங்கிணைந்து கட்ட தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் கிருபை செய்வாராக.

கர்த்தரின் பணியில்,

சகோதரி.A.பியூலா மெர்ஸி பால்

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி.ரெஜினா ராமாமூர்த்தி
செல்வன்.ஏனோக் ஜோன் மார்க் அந்தோணி
செல்வன்.ஜோஸப் பிரின்ஸ் பால்ஜெகநாதன்
செல்வி.கீதா மகேஷ்ராஜ்
செல்வன்.டெலின் ஜெர்வின் பிராங்கின்
செல்வி. அஃபியா ஆரோக்கியதாஸ்
சகோதரி.ஸ்நேகா எபிநேசர்
சகோதரி.அஸ்வினி தினேஷ்
செல்வன்.கிதியோன் ஞானசேகர்
சகோ.ஆல்வின் ஜீலியஸ் தம்புகுமார்
செல்வி.ஜீயோனா ஷேரன் செல்வசிங்
சகோதரி.ஏன்ஜலீனா மணிராஜ்
செல்வன்.ஸாப்பரின் தீமோதி சிவகுமார்
சகோதரி. பவானி ஆரோக்கிராஜ்
செல்வன். ஜான் லிவீஸ் ஜான் கெட்சன்
செல்வி. வென்பா ஜாயிஸ் ரவி ஜான்பீட்டர்
சகோ.தாமஸ்

செல்வன்.மோனித் ராஜ் வெங்கடேஷ்
சகோ.தாஸ்
சகோதரி.ஜெபராணி தர்மர்
சகோ.சதீஸ் குமார் எத்திராஜ்
செல்வன்.மெல்வீன் சாம் சாமுவேல் தாசையா
செல்வன்.கிளாட்வீன் சாமுவேல் எட்வீன்
சகோதரி.தேவ சொருபி கமலதாசன்
செல்வி.ஹாணி ஹார்ஷிதா வெங்கடேஷ்
சகோதரி.ரோஸ்லின் மேரி பால்ராஜ்
சகோ.ஸ்டாலின்
சகோ.வின்செண்ட் ஸ்வீட்
சகோதரி.ஹெப்ஸிபா பாமா சாம் ஆனந்த்
சகோதரி.பெபின் மேரிஜோ
சகோ.அசோக் குமார்
செல்வன். சைமன் ஜெய்குமார்
சகோ.ஸ்டீபஃன் ஜெயகுமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்
(ஆதி .22:18)

திருமதி & திரு. பக்தராஜ்

திருமதி & திரு.அசோக்குமார்

திருமதி & திரு.ஜோன்செல்வசிங்

திருமதி & திரு.சதீஸ் குமார்

திருமதி & திரு.ஜெஸ்டின்

திருமதி & திரு.வர்கீஸ்

திருமதி & திரு. ரிச்சர்ட்சன் டேனியல்

# 2023 ஜுலை மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/07/2023 | சகோ.பிரசாத் | சகோ.அசோக் குமார் |
| 09/07/2023 | சகோ.ரவி ஜாண் பீட்டர் | சகோ.கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 16/07/2023 | சகோ.பக்தராஜ் | சகோ.ஸ்டாலின் |
| 23/07/2023 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சகோ.சாம் சுந்தர் |
| 30/07/2023 | சகோ.சுபின் சிங் | சகோ.தாமஸ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/07/2023 | சகோ.வேலு ராமர் | சகோ.ஸ்டாலின் |
| 14/07/2023 | சகோ.வில்சன் | சகோ.பிராங்கிலின் |
| 21/07/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/07/2023 | சகோ.டேவிட் ஜெயகுமார் | சகோ.சுகுமார் |

**13/07/2023 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**15/07/2023 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – I கொரிந்தியர்

**28/07/2023 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – ரூத், எஸ்றா, நெகேமியா

# 2023 ஜுலை மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1.எதற்கு கர்த்தர் அக்கினி மதிலாக்கினார்?

2.யாருடைய விண்ணப்த்தை கர்த்தர் கேட்டார்?

3.கர்த்தருக்குள் பலப்படுத்தப்படுபவர் யார்?

4.மரக்காலை வைத்த தேசம் எது?

5.எத்தனை கொம்புகளை சகரியா கண்டார் அவை என்ன செய்தன?

6.ஆலயத்தின் அஸ்திபாரத்தை போட்டது யார்?

7.கர்த்தர் யாருக்காக வைரக்கியம் கொண்டார்?

8.யார் கர்ாருக்காய் புலம்பி அழுவார்கள்?

9.கர்த்தர் கையில் எடுத்துக்கொண்ட கோல்களின் பெயர்கள் என்ன?

10.ஒலிவமரங்கள் யாருக்கு ஒப்பிடப்பட்டது?

11.அக்கினியினின்று தப்புவிக்கபட்ட கொள்ளி என்று கர்த்தர் யாரை குறித்து சாட்சி கொடுக்கிறார்?

12.ஆண்டவரின் சமூகத்திலிருந்து புறப்பட்ட ஆவிகள் எப்படி தெரிந்தன?

13.கர்த்தர் வெறுக்கிற காரியங்கள் எவை?

14.ஞாபக புத்தகம் எதற்காக எழுதப்படுகிறது?

15.கர்த்தருடைய நாமத்துக்கு பயந்து இருந்தவன் யார்?

விடைகளை வருகின்ற 20-07-2023க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் சகரியா 1-14, மல்கியா 1-2 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2023 – ஜுன் மாத வேத வினாவுக்கு விடை

1.கீலேயாத் (ஓசியா 6:8)

2.யூதா (ஓசியா 11:12)

3.இஸ்ரவேல் ஜனங்களை (ஓசியா 13:8)

4.கழுகு (ஓசியா 8:1)

5.யாக்கோபு (ஓசியா 12:7)

6.இஸ்ரவேலர் (ஓசியா 8:9)

7.பெத்தாவேனிலுள்ள கன்றுக்குட்டியினிமித்தம் (ஓசியா 10:5 )

8.ஆபேனின் மேடைகள் (ஓசியா 10:8)

9.கர்த்தருடைய நாள் (யோவேல் 1:15,2:1)

10.யோசேபாத்தின் பள்ளத்தாக்கு (யோவேல் 3:12)

11.கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் (யோவேல் 2:32)

12.ஏதோம் (யோவேல் 3:19)

13.ஏராளமான பலத்த ஒரு ஜாதிக்கு (யோவேல் 2:2,6)

14..போஜனபலி, பானபலி (யோவேல் 1:13)

15.பெத்துவேல் (யோவேல் 1:1)

## 2023– ஜுன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.பியூலா ஜெகநாதன்
Sis.வனித்தா
Sis.சாந்தி
Sis.ஷீபா அருண்இம்மானுவேல்
Bro.ஆண்டனி
Bro.பால்ராஜ்

# Kids Corner

## SELF REALIZATION

There was a beautiful monument similarly to Tajmahal which all the people around the world loved to visit the monument was built with the most Finest and richest white marbles, which attracted the tourist at the very First sight.

The archived of the roof, the pillar were so amazing that memorized the tourists once they entered the monument they forget themselves and their minds were in imaginary word.

As the days past the monument got to become more famous. The news about the beauty of the building became more and more popular though news channel, magazine and report, was almost the talk of the town.

One particular day, there was a deep Conversation between the wall, roof, pillar and the floor. The floor began to cry bitterly roof, wall, and the pillar were worried, about the floor's cry findly, the roof asked the floor. My dear friend why are you crying 2. All these past we were under pain. They nailed us, hammered us, and drilled us. Each time they designed and snapped us, we reached hell and were back to life. All our painful and sorrow, troublesome days. "Are" gone.

Now, we are the talk of the town. This is the time for us to shine

Instead, you are sad and crying. The floor, in return replied to the say. My dear friend I agree to everything you said but did you notice one thing. All the twists who visit us only look either up or to their eye level I-c pillar and wall, roof but nobody even looks down at me. This is the reason I am sad and troubled to this the roof replied you fool it's only because of your strength and your strong foundation we are shining today. Imagine without you is it possible for all three of us to stand or can the visitors place chair root on hearing this the floor realized its mistake and was over we learned with joy and laughter never again it was sad in its lifetime. Dear friends even though it's a very simple story lets realize and analyzed the moral of the story we too most of the time work with

stiff neck, looking proud and keeping our single at eyelevel we forget to humble ourselves and look down at our trouble some days of our lives we keep ourselves so busy to impress others and shine in their presence searing for frame and identity.

But do remember, God is our creator who formed us out of dust we are just live the roof wall and the pillar God is our strong floor and basement even though we many may have everything we desire and if we forget.

God, we are nothing in our life. So let's be thankful for each and every breath we take Thank God for the food we eat, clothes that we wear. Thank for the good life He has given. When we remember this in our daily prayer's we are completely safe in His hands.

As Matthew 6:33 Say's, let's all Seek the Kingdom of God first and all the other thing's will be added unto you. Amen.

## சகோதரிகள் பகுதி

**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளுக்கு நம் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.**

### தேவனும் திட்டமும்

**இந்த தலைப்பில் நமது தேவன் அவரது பிள்ளைகளாகிய நாமும் ஊழியத்திலும், குடும்பத்திலும் திட்டமிட்டுச் செயல் படுபவர்களாகக் காணப்பட வேண்டுமென அவர் விரும்புகிறார். அவர் தமது திட்டங்களை வேதாகம தாசர்களாகிய மோசே, ஏரேமியா போன்றோருக்கும் தெளிவாகக் காண்பித்து அவர்கள் மூலமாக தமது எதிர்கால நம்பிக்கைகள் யாவையும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். (ஏரே 1:15 , 29:11).**

**காத்தராகிய இயேசுகிறிஸ்துவும், இவ்வுலகத்தில் மனிதனாக ஊழியம் செய்தக் காலங்களில் தமது பிதாவின் திட்டப்படிச் செயல்பட்டு வந்தார். தேவனின் திட்ட வழிமுறைகளை நாம் பின்பற்றும்போது அவர் நம்மூலமாக மகிமைப்படுகிறார். நாமும் ஆசீர்வதிக்கப்படுகிறோம். எடுத்துக்காட்டாக சில வேதாகம கதாபாத்திரங்கள் மூலமாக அறிந்துக் கொள்ளலாம்.**

**மோசேயின் மாமனாகிய ஜெத்ரோ, இஸ்ரவேல் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் மோசே பல மணி நேரங்கள் செலவிடுவதைக் கண்டு, தேவன் கொடுத்தத் திட்டமிடலின் யுக்திகளை அவருக்குக் கற்றுக் கொடுத்தார். அதாவது ஜெத்ரோ மோசேயிடம், "ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும், உண்மையுள்ளவர்களும், பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்து கொண்டு, அவர்களை ஆயிரம் பேருக்கு அதிபதிகளாகவும்,**

பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரித்து, பெரியாகாரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும். இப்படி அவர்கள் உம்முடைய இந்தப் பாரத்தைச் சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும் என்றார் (யாத் 18:21,22).

எண்ணாகம் 13ல் கானானைச் சுதந்தரிப்பதற்கான ஒரு திட்டயுக்திகளைத் தேவன் மோசேக்குக் கொடுத்தார் . 2-ம் வசனம் மனிதரை ஏற்படுத்தி அனுப்புகிறதற்க்கும், 3-ம் மற்றும் 17 ஆம் வசனங்களில் அத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான இடம், செல்ல வேண்டிய பாதைகள் மற்றும் அடைய வேண்டிய இலக்குகள் குறித்துத் தெளிவான செயல் திட்டங்களை வகுத்துக் கொடுக்கிறார். நீதி 15:22 "ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமறற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்." நீதி 20:18 "ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும்; நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு." நிறைவாக இயேசுவின் திட்டமிடல் தன்மைக்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டை காணலாம். அப்போ 1:4-8ல் இயேசு, தமது சுவிசேஷத்தை உலகம் முழுவதும் கொண்டுச் செல்வதை இலக்காகக் கொண்டு, அதைச் சீராக செயல்முறைப் படுதத்த ஒரு முக்கியத் திட்டத்தை முன்வைக்கிறார்.

ஆம் மத்தேயு 28:19-ல் இயேசு, " நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி" எனத்தமது பிரதான கட்டளையஜல் அவர் குறிப்பிட்டிருப்பது ஒரு வெறுமையான கூற்றாகக் காணப்படக்கூடாது என்பதில் அவர் தெளிவாக படிபடியாக விளக்கதடதை மிக நேர்த்தியாக அளித்துள்ளதைக் காணலாம். அப்போ 1:11-ல் "இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்." என்கிற இந்த வார்த்தை நம் ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துவதாற்க்குப் பெரும் ஊக்கத்தை அளிப்பதாக அமைந்துள்ளது. எனவே இவ்வாறு நமக்கு இயேசுவால் அருளப்பட்ட திட்டமிடுதலுக்கான யுக்திகள் வேதாகமத்தில் காணப்படும்போது அதை நாம் தியானித்து செயல் படுத்தி இயேசுவின் நாமம் மகிமைப்பட சாட்சிகளாய் வாழ்வோம்; அவரோடு எடுத்துக் கொள்ளப்பட ஆயத்தமாய் இருப்போம். ஆமென்!

கிறிஸ்துவின் பனியில்,

**சகோதரி. செலின் டேவிட்**

## வாலிபர் பகுதி

### உண்மையான விசுவாசம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே! எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒரு உண்மையான விசுவாசி எப்படி வாழ வேண்டுமென நம்முடைய சத்திய வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது. தன்னை ஒரு நல்ல விசுவாசி என அநேகர் சொல்லிக்கொள்வதை இக்காலத்தில் பார்க்கிறோம். ஆனால் யாக்-2:19-ல் வேதம் கூறுகிறது, "தேவன் ஒருவன் உண்டென்று விசுவாசிக்கிறாய் அப்படி செய்வது நல்லதுதான் பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன"" என்று. அப்படியென்றால் ஒரு விசுவாசிக்கும் பிசாசுக்கும் அடிப்படையில் எந்த காரியத்தில்

வித்தியாசம் காணப்பட வேண்டுமென்றால் அதே யாக்–2:17–ல் கூறுகிறது "விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்"". ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல கிரியைகள் இல்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. (யாக்–2:26)

1. நற்கிரியைகளே நம் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது:– யோப்பா பட்டணத்தில் கிரேக்க பாஷையில் தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள். ஒரு நாள் அவள் வியாதிப்பட்டு மரித்துப் போனாள். அவளை குளிப்பாட்டி மேல் வீட்டிலே கிடத்தி வைத்தார்கள். (அப்–9:26,27) நடந்தது என்ன தெரியுமா! பேதுரு அந்த ஊரில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவனை அழைத்தனுப்பினார்கள். பேதுரு வந்த போது அநேக விதவைப் பெண்கள் அழுது தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், தானமாய்க் கொடுத்த அநேக வஸ்திரங்களையும் அவனுக்கு காண்பித்தார்கள். அவள் அநேக விதவைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் தேவையான வஸ்திரங்களை செய்து கொடுத்திருந்தாள். இதைப் பார்த்த பேதுருவின் உள்ளம் உடைந்தது. இத்தனை நற்செயல்களை செய்த இந்த சீஷியை ஆண்டவர் நிச்சயமாய் உயிரோடு எழுப்புவார் என்று விசுவாசித்து பிரேதத்தின் புறமாய் திரும்பி "தபீத்தாளே எழுந்திரு"" என்றான். அதே விநாடியில் அவள் கண்களைத் திறந்து எழுந்தாள் அல்லே லூயா. அவள் செய்த தரும காரியங்கள் அவளை மரணத்திலிருந்து விடுதலை தந்தது. ஆம் பிரியமானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை சுதந்தரித்து கொள்ள வேண்டுமென்றால் நற்கிரியைகளை அதிகமாய் செய்கிற விசுவாசிகளாய் நாம் வாழ வேண்டும். இயேசு சொன்னார், "நீயோ தர்மஞ் செய்யும்போது உன் தர்மம் அந்தரங்கமாய் இருப்பதற்கு உன் வலதுகை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது"" (மத்–6:3) அது போல செய்வோமா? கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

2. நமது நற்கிரியைகளே சமுதாயத்தைச் செழிப்பாக்குகிறது:– இத்தாலியாப் பட்டாளத்திலே பணி செய்த நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியாப் பட்டணத்திலே இருந்தான். அவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து

ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான் (அப்–10:2). இவன் புறஜாதியான மனுஷன் யூதனல்ல. ஆண்டவர் அவனுக்கு தரிசனம் அருளிப் பேதுருவை அழைத்து வரச்சொன்னார். அப்படியே பேதுருவுக்கு ஆண்டவர் தரிசனமாகி புறஜாதியான் என்று பார்க்காதே, தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று சொல்லி புறஜாதிகளுக்காகவும் அவர் இரத்தம் சிந்தினதையும் எல்லா ஜாதிகளுக்கும் இரட்சிப்பு அவர் மூலமாகவே வருகிறது என்பதையும் திருஷ்டாந்தப்படுத்தி பேதுருவை அனுப்பினார். அப்படியே பேதுரு போய் கொர்நேலியுவை சந்தித்து தேவ வசனங்களைக் கூறினான். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பை பெறுவானென்று பேதுரு சொல்லிய போது யாவர் மேலும் பரிசுத்த ஆவி யானவர் இறங்கினார். ஆமென். கொர்நேலியு என்ற புறஜாதியான் ஞானஸ்நானம் பெற்று முதல் புறஜாதிக் கிறிஸ்தவனாக மாறினான். எத்தனை சந்தோஷம். அதனால் தான் நீங்களும் நானும் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம். ஒரு மனிதனுடைய நற்செயல் முழுச்

சமுதாயத்திற்கும் ஆசீர்வாதத்தை கொண்டு வந்தது. இதேபோல் நம்மூலமாக ஆண்டவர் சரித்திரம் படைக்கவேண்டாமா? ஒப்புக்கொடுப்போம். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது""(மத்-5:16). நம் தேசத்திற்கு சுவிசேஷம் சொல்ல வந்த மிஷனரிகள் முதலாவது பசியாற மக்களுக்கு உணவளித்தார்கள், பள்ளிகள் நிறுவி கல்வியறிவு கொடுத்தார்கள், மருத்துவமனைகளை நிறுவி நோயாளிகளைக் காப்பாற்றினார்கள், மூட நம்பிக்கைகளை அழித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். பிறகுதான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து மக்களை ஆண்டவருக்குள் வழி நடத்தினார்கள். வெறும் பிரசங்கங்கள் சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்திவிடாது, நற்கிரியைகளே சமுதாயத்தை உயர்த்தும் தேவ இராஜ்ஜியத்தைக் கட்டும். "இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினால் அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்."" (அப்-10:38)

3. நற்கிரியைகளே நமக்கு நித்திய ஜீவனை (பரலோக இராஜ்ஜியத்தை) கொடுக்கிறது:- பரலோக இராஜ்ஜியத்தில் ஒருவன் பிரவேசிக்க வேண்டுமானால் அடிப்படையாக செய்ய வேண்டிய காரியம் நற்கிரியைகளே. இரட்சிக்கப்பட்டுவிட்டேன், ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன், அந்நிய பாஷை பேசிவிட்டேன் இது போதும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம் என யாரும் பகல் கனவு காணவேண்டாம். மத்-25: 41 முதல் 46 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். "பசியாயிருந்தேன் நீங்கள் எனக்கு போஜனம் கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தை தீர்க்கவில்லை, அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னை சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரமில்லாமல் இருந்தேன் நீஙகள் எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை, வியாதியுள்ளவனாயும் காவலில் அடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை... மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன்"" என்று சொல்லி நித்திய ஆக்கினையை (நரகத்தை) அவர்களுக்குக் கொடுத்தார். ஆகவே இனிமேல் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். மலைப்பிரசங்கத்திலே ஆண்டவர் குறிப்பிட்டு சொன்ன அனைத்து நற்காரியங்களையும் நாம் வாழ்க்கையில் கடைப்பிடிப்போம். மத்-5 முதல் 7-ஆம் அதிகாரம் வரையுள்ள வசனங்களை தியானியுங்கள். பூமிக்கு உப்பாக, ஒளியாக இருப்போம், நம்மை பகைக்கிறவர்களை நேசித்து, மன்னித்து, உதவிகளையும் நன்மைகளையும் செய்வோம். சகோதரனிடத்தில் ஒப்புரவாகி சமாதானமாயிருப்போம், பிறர் பொருட்களை இச்சியாதிருப்போம், உள்ளதை உள்ளதென்று சொல்வோம், சத்தியத்தைப் பேசுவோம், இரகசியமாய் தானதருமங்களைச் செய்வோம், எப்போதும் கவலைப் படாமல் சந்தோஷமாயிருப்போம். பிறரை குற்றவாளிகளாகத் தீர்க்காதிருப்போம், நல்ல கனிகளை கொடுப்போம். விட்டுக் கொடுப்போம், எல்லோரையும் ஏற்றுக்கொள்வோம். இவைகளைச் செய்யும்போதுதான் நாம் நம்மை உண்மையான விசுவாசிகள் என சொல்லிக்கொள்ள முடியும். ஒருவரும் நம்மை அசைக்கமுடியாது. கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து உண்மையான விசுவாசிகளாய் வாழ அருள் புரிவாராக.

வாலிபம் இயேசுவுக்கே

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில











# செயர்குழு உறுப்பினர்கள் 2023 - 2025



S.ஸ்டாலின்
PH.66021072
முதன்மை ஊழியர்



செயலாளர்
சகோ.சுகுமாரன்
PH.99837646



பொருளாளர்
சகோ.சிவக்குமார்
PH.97224276



வாலிப ஐக்கிய தலைவர்
சகோ.சுபின் சிங்
PH.65772762



பெண்கள் ஐக்கிய தலைவி
Sis.செலின் டேவிட்
PH.65967170

# சபை ஊழியப்பொறுப்பாளர்கள் 2023 - 2025



ஓய்வு நாள் பாடசாலை
Sis.அனிதா ராஜ்



ஜெப ஊழியம்
Sis.பியூலாமெர்சி பால்



திக்கற்ற பிள்ளை ஊழியம்
சகோ.பிராங்ளின்



மிஷினெரி ஊழியம்
சகோ.கிறிஸ்டோபர்



வாகன ஊழியம்
சகோ.கிரண் குமார்



பாடகர்குழு தலைவர்
சகோ.ஆல்வின்



கேம்ப் ஊழியம்
சகோ.பிரசாத்



இணையதள ஊழியம்
சகோ.ஆரோக்கியராஜ்



செய்திமலர் ஊழியம்
சகோ.ஆண்டனி



கணக்கு தணிக்கையாளர்
சகோ.சாம் ஆனந்த்



விதிமுறை கண்காணிப்பாளர்
சகோ.அருண் இம்மானுவேல்